பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஸூ ஆவணி ீ 09 உ சனிக்கிழமை (25-08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 04 கதிர்: 175

# கண்மூடித்தனமான வான் தாக்கு; இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவிப்பு

## பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு வழியில்லை என்றும் வலியுறுத்து

புதுடில்லி, ஆகஸ்ட் 25

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது இலங்கை அரசுப்படைகள் நடத்தும் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களினால் (Indiscriminate Bombing) அப்பாவிப் பொதுமக்கள் ஏராளமாகக் கொல்லப்படுவது குறித்து இந்தியா தனது ஆழ்ந்த க்வலையை மீண்டும் நேற்றுத் தெரிவித்திருக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது என்றும் இந்தியா வலியுறுத்தியிருக்கிறது.

இந்திய அரசின் இந்த நிலைப்பாட்டை இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் வெளியிட்டார்.

''இருதரப்பினரும் சண்டையை நிறுத்தி பேச்சுக்கள் மூலம் தீர்வு காண மீண்டும் முயலவேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்துகிறது.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதன் மூலமே நெருக்கடியைத் தீர்க்கலாம் என்பதே இந்தியாவின் அபிப்பிராயமாகும்.''

—இப்படி வெளியுறவு அமைச்சு அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-எ)

## மாங்குளம் முகாம் மீது புலிகள் உக்கிரத் தாக்குதல்

மாங்குளம் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் உக்கிரத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

மாங்குளம் முகாம் இராணுவத்தினருக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

மாங்குளம் முகாம் மீது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவில் ஷெல்!

யாழ்ப்பாணம், ஆக. 26

ஓட்டுமடம், பொம்மைவெளி, ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று நள்ளிரவு 11 மணிமுதல் இன்று அதிகாலைவரை தொடர்ந்து ஷெல் குண்டுகள் பெரும் அதிர்வுடன் அடுத்தடுத்து விழுந்து வெடித்த வண்ணம் இருந்தன.

இந்தக் குண்டுகளினால் அப்பகுதியில் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறையில் நேற்று படகு மீது ஹெலி சூடு!

இராமேஸ்வரத்தில் அகதிகளை இறக்கிவிட்டு திரும்பிய வள்ளம் ஒன்றின் மீது நேற்றுக் காலை கொழும்புத்துறைக்கு அப்பால் கல்முனைக் கடற்பகுதியில் வைத்து ஹெலி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இந்தச் சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த மூவரில் இருவர் இந்திய மீனவர்கள் ஆவர். காயமடைந்த மூவரும் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

வள்ள ஓட்டியான மரியதாஸ் ரவி (28 வயது)- பொலிகண்டி, பி. கோவிந்தராஜ் (48 வயது)- இராமேஸ்வரம், பி. சுப்பையா (42 வயது) - இராமேஸ்வரம்.

இவர்களில் மரியதாஸ் ரவி என்பவரின் வயிற்றை குண்டு துளைத்திருக்கிறது. (ஒ-3-5)

## செய்திச் சாரம்

### ஓமந்தையில் விமானத் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 25

ஓமந்தை, இறம்பைக்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. (ஒ-5)

### வெல்லாவெளியில் கடும் மோதல்

யாழ்ப்பாணம், ஆக. 25

மட்டக்களப்பு, வெல்லாவெளியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றது.

அந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீர மரணமடைந்தனர்.

மைக்கேல் ராஜ் (சின்னத்தம்பி - விநாயகமூர்த்தி, கோவில்போரதீவு), தங்கராஜா மகேந்திரன் ஆகியோரே அந்த இரு போராளிகளும் ஆவர். (ஒ-5)

### பூநகரியில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 25

பூநகரி, செல்வபுரத்தில் கடந்த வியாழக்கிழமை ஹெலி தாக்கி ஒருவர் கொல்லப்பட்டார். (ஒ-5)

### சிப்பாய்கள் நால்வர் பலி

கடந்த புதன்கிழமை தொடக்கம் யாழ். குடாநாட்டில் இலங்கை அரசுப் படைகள் நடத்தி வரும் தாக்குதலில் 4 இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும் —

கண்ணிவெடியில் சிக்கி 16 படையினர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. [ஒ எ]

### லொறிகள் தடுத்து வைப்பு

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற லொறிகள் மதவாச்சியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

வடபகுதியில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதே இதற்குக் காரணம். (இ-எ)

### கொழும்பு சென்ற வைத்தியக் குழு புறப்பட்டது

யாழ். போதனா வைத்திய சாலையை மீள இயக்குவது சம்பந்தமாக பேச்சுக்கள் நடத்தச் சென்ற வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமையிலான உயர்மட்டக் குழு கொழும்பில் இருந்து புறப்பட்டது.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து புறப்பட்ட இந்தக் குழு இன்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேரும் என தகவல் கிடைத்தது. (இ-எ)

## ஊர்காவற்றுறை, காரைநகரில் துருப்புக்கள் மேலும் குவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 25

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் மேலும் துருப்புக்கள் காரைநகரிலும், ஊர்காவற்றுறையிலும் குவிக்கப்பட்டு வருகின்றன.

நேற்றுக் காலையில் இருந்து மாலை வரை பலாலியில் இருந்து அடுத்தடுத்துப் பல தடவைகள் ஹெலிக்கொப்டர்கள் படையினரைக் கொண்டு சென்று இறக்கியதை அவதானிக்க முடிந்தது.

இதேசமயம்—

ஊர்காவற்றுறையில் தரை இறங்கி அங்கு நிலைகொண்டிருக்கும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து கடும் மோதல் இடம்பெற்று வருவதாக அறிய வந்தது.

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து வெளியேறி

[4 ஆம் பக்கம் பார்க்க]

### மூன்றாவது தடவையாக - மீண்டும்

## மானிப்பாய் ஆஸ்பத்திரி மீது நள்ளிரவில் வான் தாக்குதல்!

மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா ஆஸ்பத்திரி மூன்றாவது தடவையாக நேற்று முன்தினம் நள்ளிரவு 11.30 மணியளவில் மீண்டும் வானத் தாக்குதலுக்கு இலக்காகியது.

ஆஸ்பத்திரியை அடையாளம் காட்டுவதற்காக ஆஸ்பத்திரிச் சூழலில் டயர் எரிக்கப்பட்ட பகுதிகளை நோக்கியும், சத்திரசிகிச்சைப் பிரிவு கட்டடத்தின் மீதும், ஆஸ்பத்திரி சுற்றாடலிலும் ஹெலிக்கொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

சத்திர சிகிச்சைப் பிரிவு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வேலணையில் காயமுற்ற மக்கள் சிகிச்சை வசதியின்றி அவதி!

யாழ்ப்பாணம், ஆக. 25

கடந்த புதன், வியாழக்கிழமைகளில் வேலணை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினர் நடத்திய பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதல்களால் காயமடைந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் சிகிச்சை எதுவும் பெறமுடியாத நிலையில் மரணத்தை எதிர்நோக்குகின்றனர்.

இவ்விடயம் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை ஊர்காவற்றுறைப் பகுதியில் இராணுவத் தாக்குதல்களால் காயமடைந்த பொதுமக்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**மலிவு விற்பனை**

**V. K. M. Farm**

எம்மிடம் புறொயிலர்ஸ் இறைச்சிக் கோழி என்பன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். சில்லறை விலை (50/-) தொடர்பு 12, கனகசபை லேன், (யாழ்/ இந்துக் கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம்.

[13917]

**அடையாள அட்டை கவறிடுதல்**

உங்கள் அடையாள அட்டைகளுக்கு கவறிட்டுக் கொள்ள (Limination) கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், ]14100]

**கல்வி**

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளிலும், மாநகரசபை எல்லைக் குட்பட்டவர்களுக்கும் கற்பிக்கப்படும். தொடர்பு:- சனி, ஞாயிறு தினங்கள் அல்லது கடிதமூலம் S. ஜெயராஜா, கல்யாணி ஆங்கிலக் கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

(3912)

# எரியும் நெருப்புக்குள் தமிழ் இளைஞரை எறிந்து பச்சைப்புலிகள் சித்திரவதை!

## "பசை" கொடுத்த பலரை விடுவிக்கவும் செய்தனர்

*வடக்கு – கிழக்கில் யுத்தம் வெடித்ததும் கொழும்பில் இருந்த தமிழ் இளைஞர்களை பொலீசாரும், இராணுவத்தினரும் கைது செய்ததும் —*

*கைது செய்யப்பட்டவர்கள் இராணுவ முகாம்களில் வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டதும், சிலர் கொல்லப்பட்டதும் இரண்டு மாதங்களுக்கு முந்திய சம்பவங்கள்.*

*"பச்சைப் புலி"களின் சித்திரவதைக்கு ஆளாகித் தப்பி வந்தவர்களில் ஒரு சிலர் தான் இப்போது யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்கள்.*

*அவர்களில் ஒருவர் உதயனுக்கு அளித்த பேட்டியை இங்கு பிரசுரிக்கிறோம்.*

*பேட்டி கண்டவர் உதயன் பருத்தித்துறைச் செய்தியாளர்.*

*தமக்கு நேர்ந்த கதியை விபரமாகக் கூறும் இவர் கொழும்பில் வியாபாரம் செய்தவர். வயது நாற்பது. சொந்த ஊர் புலோலி தெற்கில் உள்ள குரும்பசிட்டி. தலைநகரில் முகத்துவாரம் சென். ஜேம்ஸ் அவனியுவில் வசித்தார். அங்கு வைத்தே அவர் கைது செய்யப்பட்டார்.*

*அவர் தாம் பட்ட அவலங்களையும். இம்சைகளையும் கண்ட காட்சிகளையும் எடுத்துச் செல்கிறார்; படியுங்கள்:–*

முகத்துவாரத்தில் உறவினருடன் தங்கியிருக்கும் போது ஜூன் மாதம் 26 ஆந் திகதி புறக்கோட்டைப் பொலீசார் இரவு பன்னிரண்டு மணியளவில் அப்பகுதியில் வசித்த தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர். அதே நாளில் என்னையும் கைதுசெய்தனர்.

எங்களை மூன்று நாட்களாக புறக்கோட்டை பொலீஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்து வைத்திருந்தனர். இரண்டாம் நாள் கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத்தினர் எங்களை பெயரளவில் பார்வையிட்டு விசாரணை செய்தனர். அச்சமயம் எல்லோரும் அடுத்த நாள் விடுதலை செய்யப்படுவர் என்று தெரிவித்தனர்.

ஆனால் மூன்றாம் நாள் இரவு புறக்கோட்டை பொலீஸ் நிலையம் அருகில் நின்ற முற்றாக மூடப்பட்ட 'டிரக்' வண்டியில் இராணுவத்தினர் அனைவரையும் ஏற்றி இரத்மலானைக்குக் கொண்டு சென்றனர். அங்கு சென்ற போது தான் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெகிவளை போன்ற ஏனைய பகுதிகளிலிருந்தும்மற்றும் புறக்கோட்டைப் பகுதியில்உள்ள லொட்ஜுகளில் இருந்தும் ஜிந்துப்பிட்டி கோயிலிலிருந்தும் (இவர்கள் அகதிகள்) பல நூற்றுக்கணக்கானோர் காணப்பட்டனர்.

அங்குவந்த பச்சைப்புலிகளின் பொறுப்பாளர் பதினைந்து தொடக்கம் முப்பது வயதுக்குட்பட்டோரை ஒரு பிரிவாகவும், முப்பது தொடக்கம் நாற்பது வயதுக் குட்பட்டோரை வேறொரு பிரிவாகவும் பிரித்தனர். எம்மை நாலாம் மாடிக்கு செல்லுமாறு பணித்தனர்.

எங்கள் மண்டபத்திற்கு அருகே இன்னொரு அறையில் ஒன்பது ஜே. வி. பி. இளைஞர்கள் இருந்தனர். அவர்களால் எழுந்து சீராக நடக்க முடியாத நிலைமை. அவர்களின் முழங்கால் மூட்டுக்கள் அடித்து நொறுக்கப்பட்டிருந்தன. எனினும் அவர்களுக்கு நல்ல உணவு, போர்வை (பெட்சீட்), தலையணை, பற்பசை, சவர்க்காரம் போன்றவையும் தினசரிப் பத்திரிகைகளும் வழங்கப்பட்டன.

நாம் பிடிபட்ட தினத்திலிருந்து சேட் கூட இன்றி உடுத்த சாரத்துடனேயே சுமார் ஒரு மாத காலமாக அந்த முகாமில் இருந்தோம்.

### எரியும் நெருப்பில் தூக்கி வீசினர்

எனது கண்முன்னால் பல தமிழ் இளைஞர்களை விசாரணையின் பின் வெளியே கூட்டிச்சென்று எரிந்து கொண்டிருந்த நெருப்புக்குள் தூக்கி வீசி எறிந்தனர். அவ்வாறு எரிக்கப்பட்டவர்கள் அனேகமாக பதினைந்திற்கும் முப்பதிற்கும் இடைப்பட்ட வயதினரே.

எனது தகப்பனார் கொழும்பில் இருந்ததால் என்னைத் தேடி முகாமிற்கு வந்து மூன்று வேளை உணவையும் குடிப்பதற்குத் தண்ணீரும் தந்தார். இவ்வுணவுப் பார்சலைப் பரிசோதித்த பின்பே இராணுவத்தினர் அனுமதித்தனர்.

ஏனையோருக்கு இராணுவத்தினர் பருப்புக்கறியுடன் சோறு வழங்கினர். பசியைப் போக்குவதற்கு அதை ஏனோ தானோ என்று அவர்கள் உண்டனர்.

முப்பதுக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்ட வயதினரை அடிக்கடி பூட்ஸ் கால்களாலும், கைகளாலும் அடிப்பார்கள். இரத்மலானைக்கு விமானங்கள் இராணுவத்தினரின் பிரேதங்களைக் கொண்டுவரும் போதெல்லாம் எம்மை பச்சைப்புலிகள் குழு தாக்கும்.

### மயங்கும் வரை பந்தடிப்பர்

மேலும் புதிதாக யாராவது இளைஞர்களைக் கொண்டு வந்தால் அவர்கள் மயங்கி விழும்வரை பத்துப் பதினைந்து இராணுவத்தினர் சேர்ந்து, பந்தடிப்பது போன்று அடித்து உதைப்பார்கள். அவர்களது ஓலம் மரண வேதனை போல் எமது செவிப்பறைக்கு எட்டும். அனேகமாக இரவு பத்துமணிக்குப் பின்னர் தான் இராணுவத்தினரின் சித்திரவதை நடைபெறும். இந்த வதைகளைப் பார்த்த பின் எங்களுக்கு நித்திரை வருவதில்லை. ஆனால் நாம் எமக்கிடையில் கதைக்கக் கூடாது என்பது உத்தரவு. யாராவது முணுமுணுத்துக் கேட்டால் இராணுவத்தினர் காட்டு மிராண்டிகள் போன்று நடந்து கொள்வர்.

### 'பசை' கேட்டார்

இப்படி இருக்கும் போது பச்சைப்புலிகளில் ஒருவர் ஒரு முறை என்னிடம் வந்து தனியாக அழைத்தார். நான் ஐம்புலனும் கெட்டுப் பயந்து விட்டேன். தமக்கு ஐயாயிரம் ரூபா (பசை) தந்தால் மேலதிகாரிகளிடம் கூறி என்னை விடுவிப்பதாகக் கூறினார். நான் எதற்கும் மாலையில் சாப்பாடு கொண்டு வரும் போது அப்பாவிடம் பேசிவிட்டுச் சொல்கிறேன் என்று கூறினேன்.

தந்தையார் வந்ததும் பச்சைப்புலி கூறிய விபரத்தைத் தெரிவித்தேன்.

அதன்படி என்னை விடுதலை செய்வதற்குரிய ஒழுங்குகளை அந்தப் பச்சைப்புலி மேற்கொண்டார். என்னுடன் கூட இன்னுமிருவர் அவர்களின் வார்த்தையை நம்பி பணம் கொடுக்கச் சம்மதித்தனர்.

அந்த பச்சைப்புலி எமது அடையாள அட்டையை வாங்கி வைத்துக்கொண்டு மறுநாள் மாலை புறக்கோட்டை மெயின் வீதியிலுள்ள கோயிலுக்கருகாமையில் பணத்துடன் நிற்குமாறு கூறி எங்களை வீடு செல்ல அனுமதித்தார்.

அதே போல அவர் கூறிய இடத்தில் அடுத்த நாள் நாங்கள் மூவரும் பணத்துடன் நின்றோம். பணத்தைப் பெற்றுக்கொண்டு அடையாள அட்டைகளைத் தந்தார்.

தமிழ்ப் பகுதியிலுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளை, கொழும்புக்கு கல்வி கற்கவென்று அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு என்று அனுப்பினர். ஆனால் அங்கு பொலீசார், இராணுவத்தினர் தேடுதல்நடத்திதமிழ் இளைஞர்களை கைது செய்து சித்திரவதையும் சில வேளைகளில் கொலையும் செய்தனர்.

ஜூன் மாதம் பத்தாந்திகதியின் பின் கொழும்பிலிருந்து தமிழ்ப்பகுதிகளுடன் எவ்வித தொடர்பும் ஏற்படுத்த முடியாத நிலை இருந்தது.

கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்க லொறிகள் வரும் போது அதில் ஒன்றில் ஏறி இவ்விடம் வந்தேன். இனிமேல் எனக்கு கொழும்பு செல்லும் எண்ணமே கிடையாது.

— இவ்வாறு தனக்கேற்பட்ட அனுபவங்களை கவலைதோய்ந்த முகத்துடன் தெரிவித்தார்.

(அ–118)

## 500 மீனவரை காணோம்

டாக்கா, ஆக. 25

வங்காள விரிகுடாவில் மீன்பிடிக்கச் சென்ற பங்களாதேஷ் மீனவர்களில் சுமார் 500 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

நூறு படகுகளில் மீனவர்கள் சென்றனர் என்றும் அவற்றில் 50 படகுகள் மீனவர்களுடன் திரும்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எஞ்சிய 50 படகுகளுக்கும் அவற்றில் சென்ற மீனவர்களுக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்கொந்தளிப்பில் அப்படகுகள் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

(இ–எ)

## உலக நாடுகள் நிராகரிப்பு

லண்டன், ஆக. 25

குவைத்தில் இருந்து நேற்றுடன் வெளிநாட்டுத் தூதரகங்களை மூடிவிட வேண்டும் என்று ஈராக் விதித்த காலக் கெடுவை உலக நாடுகள் பல நிராகரித்து விட்டன.

தூதரகங்களை மூடாத நாடுகளின் ராஜதந்திரிகள் சாதாரண பிரஜைகளாகவே நடத்தப்படுவர் என்று ஈராக் ஏற்கனவே அறிவித்திருந்தது.

(ஒ–எ)

**லைபீரியா**

## அமைதிப் படையை எதிர்க்க இளர்ச்சிப் படைகள் முடிவு

மொன்றேவியா, ஆக. 25

லைபீரியாவில் கடந்த ஒன்பது மாதங்களாக இடம் பெற்று வரும் சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர ஐந்து மேற்கு ஆபிரிக்க நாடுகளின் படைகள் அங்கம் வகிக்கும் அமைதிகாக்கும் படை மொன்றேவியாவுக்குச் செல்ல உள்ளது.

சியாராலியோன், நைஜீரியா, கானா, கினி, சாம்பியா ஆகிய நாடுகள் தலா 4 ஆயிரம் துருப்புக்களை அமைதிகாக்கும் படையாக அனுப்பி வைத்துள்ளன.

சியாராலியோன் தலைநகர் பிரீடவுணில் இருந்து இப்படைகள் நேற்று மொன்றேவியா நோக்கிப் புறப்பட்டன

இதனிடையில் அமைதி காக்கும் படையை எதிர்த்துப் போராடப் போவதாக, லைபீரிய அரசுக்கு எதிராக கிளர்ச்சி நடத்தும் விடுதலைப் படைகள் தளபதி சார்ள்ஸ் ரெய்லர் அறிவித்திருக்கிறார்.

(இ–எ)

## அறிவித்தல்

இலக்கம் 42, 44 பெரியகடையில் த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் என்ற பெயரில் இயங்கிய ஸ்தாபனத்தில் முகாமையாளராக பணிபுரிந்த காரைநகரை சேர்ந்த பொ. இராஜரட்ணம் (P. R.) 09-08-90 முதல் விலகிக் கொண்டார். எனவே எமது ஸ்தாபனத்துடன் தொடர்புடைய எவரும் இவருடன் எதுவித கொடுக்கல் வாங்கல்களும் செய்ய வேண்டாம் என இத்தால் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்

[14099]

## ஈழ அகதிகளை காணவில்லை!

கோவை, ஆக. 24

கோயம்புத்தூரில்ஆர். எஸ். எஸ். புரம் ஆண்கள் உயர் நிலைப் பாடசாலையில் தங்கியிருந்த 278 இலங்கைத் தமிழ் அகதிகளில் 17 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

அவர்களைக் கண்டுபிடிக்கும் [illegible] ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ–எ)

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை கந்தையா

[கொக்குவில் ஸ்தான C·C.T.M. பாடசாலை அதிபர்]

166 நாவலர் வீதியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கந்தையா இறைபதமைடந்தார்.

இவர் ஜெகதீஸ்வரியின் (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை உப அதிபர்) அன்புக் கணவரும், சத்திய சீலன் (கண்ணன்) (அவுஸ்ரேலியா), சசிகலா, சசிலேகா, சசிச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகுமார் ஆசிரியரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமச்சடங்குகள் 23-08-90 வியாழக்கிழமை ஆலடி ஒழுங்கை ஊரெழுவில் நடைபெற்று பூதவுடல் பொக்கணை மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது என்பதை ஆழ்ந்த துக்கத்துடன் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

ஜெகதீஸ்வரி கந்தையா [மனைவி]

மைத்துனன் [பாலா]

166, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[13918]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# அறுவடை செய்யமுடியாத நிலையில் சுமார் ஆயிரம் ஏக்கர் நெல் வயல்

யாழ்ப்பாணம், ஆக. 25
கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் முகாமுக்கு சமீபமாக உள்ள சுமார் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் பயிரை அறுவடை செய்ய முடியாமல் உள்ளது.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் இதனைத் தெரிவித்தார்.

அதே வேளை பரந்தன் முகாமுக்கு அருகில் உள்ள ஒரு மில்லில் 3,000 மூடை நெல் உள்ளது. அதனையும் எடுக்கமுடியாத நிலைஇருந்து வருகிறது.

இந்த இரு விடயங்கள் குறித்தும் அரச அதிபர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொண்டுள்ளார். (இ-3)

## 7 சிப்பாய்கள் காயமுற்றனர்

கொழும்பு, ஆக. 25
யாழ். குடாநாட்டில்நேற்று முன்தினம் புதன் இலங்கை ஆயுதப்படையினர் ஆரம்பித்த தாக்குதல் நடவடிக்கைகளில் ஏழு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று கொழும்பில் அரசவட்டாரங்கள் தெரிவித்தன. [அ-எ]

## வைத்திய நிலையமும் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 25
புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் கொக்குவில் ஸ்ரேஷன் வீதி தனியார் வைத்திய நிலையம் ஒன்றும் பலத்த சேதமடைந்தது. (இ - 5 - ரி)

## கடலிலே விழுந்தன

வல்வெட்டித்துறை, ஆக. 25
கடந்த புதன்கிழமை வல்வெட்டித்துறையில் ஹெலியில் இருந்து வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் பெரும்பாலானவை கடலில் விழுந்தன. [இ-160]

# 6 ஆயிரத்து 500 மாணவர் பல்கலைக்கழக அனுமதி

இந்த ஆண்டு, நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் 6 ஆயிரத்து 500 புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஆனால் பல்கலைக் கழக அனுமதிக்கு தகைமை பெற்ற மாணவரின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 361 என்று உயர்கல்வி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# சாளியில் வந்தவர் ஹெலியில் சென்றார்

யாழ்ப்பாணம், ஆக. 25
சாளி மோட்டார் சைக்கிளில் வந்தவர் சாளி மோட்டார் சைக்கிளுடன் ஹெலியில் ஏறிச் சென்றார்.

இந்தச் சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் கண்டாவளை கோயிலடிப் பகுதியில் இடம் பெற்றிருக்கிறது.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் அது பற்றி விபரித்தார்.

வேறு ஒரு விமானத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமுற்ற அவர், தற்போது மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கிளிநொச்சியில் இருந்து தாம் டிராக்டர் ஒன்றில் நெல் மூடைகளை ஏற்றி வந்ததாகவும் —

டிராக்டர் கண்டாவளைக்கு அருகே ஆற்று மணல் பகுதியில் புதைந்ததாகவும் —

அதனை வேறு டிராக்டர்கள் கொண்டு மீட்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது தங்கள் டிராக்டர் ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் அவர் சொன்னார்.

தாழப்பறந்து வந்த ஹெலி தாக்குதல் நடத்தியதில் அங்கு நின்ற மொத்தம் நான்கு டிராக்டர்களின் இன்ஜின்கள் சேதமுற்றன.

ஹெலிச் சூட்டினால் அப்பகுதியில் வேறு சிலர் உயிரிழந்தனர்.

### சாளியில் வந்தவர்

பின்னர் ஹெலி மேலே உயர எழும்பியது.

அப்போது அருகில் கோவிலடிப் பகுதியில் சாளி மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர். தமது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு தமது தோளில் இருந்த ''துவாய்த் துண்டு'' ஒன்றை அசைத்து ஹெலிக்கொப்டருக்கு சைகை காட்டினார்.

உடனே ஹெலிக்கொப்டர் அப்பகுதியில் தரையிறங்கியது.

இறங்கிய ஹெலியில் சாளி மோட்டார் சைக்கிலும், அதில் வந்தவரும் ஏற்றப்பட்டனர். ஹெலி புறப்பட்டுச் சென்றது.

- இப்படி அவர் மேலும் கூறினார்.

படையினருக்கு தகவல் கொடுக்கும் யாரேனும் இப்படி ஹெலிக்கொப்டரை சைகை காட்டி அழைத்து, அதில் ஏறிச் சென்றிருக்கக் கூடும் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

### சீனி மூடை கொண்டு வந்தவர்கள்

சடந்த வாரத்திலும் சைக்கிளில் சீனி மூடை ஏற்றி வந்த இருவர் கண்டாவளைப் பகுதி வெளி ஒன்றில் வைத்து இவ்வாறு ஏற்றிச் செல்லப் பட்டதாகவும் —

அவர்களின் சைக்கிள்களும், சீனி மற்றும் பொருள்கள் அடங்கிய மூடைகளும் அநாதரவாகக் கிடக்கக் காணப் பட்டதாகவும் தெரியவந்தது. (உ-5)

# தோட்ட பகுதிகளில் மீண்டும் கலப்பை - துலா - பட்டை

திருநெல்வேலி, ஆக. 25
நீண்டகாலத்தின் பின் மீண்டும் தோட்டப் பகுதிகளில் கலப்பை, துலா, பட்டை ஆகியவற்றைப் பயன்படுத்த தோட்டக்காரர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இணுவில், மருதனார்மடம், சுன்னாகம், ஏழாலை போன்ற பகுதிகளில் உள்ள தோட்டங்களில் நீர் இறைப்பதற்கு அதிகளவில் துலாவும் பட்டையும் பயன்படுத்தப்படுகின்றன, மற்றும் நிலத்தை உழுவதற்கு கலப்பை பயன்படுத்தப் படுகிறது.

சுன்னாகம் சந்தையில் தற்பொழுது நீர் இறைக்கும் பட்டைகள் விற்பனைக்கு வந்துள்ளன. [இ-143[

# பழைய வாழ்க்கை முறைக்கு நெடுந்தீவு திரும்புகிறது

## பண்ட மாற்றும் ஆரம்பம்

நெடுந்தீவு, ஆக. 25
உணவுப் பிரச்சினை காரணமாக நெடுந்தீவில் மீண்டும் கடந்தகால வாழ்க்கைமுறை உருவாகி வருகிறது.

பனம்பழத்தைத் திரும்பிப் பார்க்காதவர்கள் கூட அதிகாலை பனந்தோட்டங்களுக்குச் சென்று விழுந்த பழங்களைப் பொறுக்குவதைக் காணக்கூடியதாகஇருக்கிறது.

ஏதாவது காரணங்களைக் கூறி நாளுக்கு நாள் மீன்வகைகளுக்கே விலைகளைக் கூட்டி விற்றுவந்த மீனவர்கள் இப்போது கூடை போன்ற சிறிய மீன்களைச் சுமந்தபடி வீடு வீடாக நீண்டதூரம் நடந்து செல்லுவதையும், ஒடியல், தேங்காய், பனம்பழம் என்பவற்றைக் கேட்டு தமது மீன் வகைகளைப் பண்டமாற்றாக வழங்கி வருவதையும் காணக் கூடியதாக உள்ளது. பணப் புழக்கம் குறைந்ததே இதற்குக் காரணம் ஆகும். (இ-111)

## படகில் சென்றோர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 25
பாசையூர், மணியந்தோட்டப் பகுதிகளில் இருந்து படகில் சென்றோர் மீது மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதலில் சிலர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் புதன்கிழமை இடம் பெற்றது.

காயம் அடைந்தவர்களில் ஒருவரான ஜோர்ஜ் மரியதாசன் என்பவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ - 5 - ரி)

# கப்பலில் மன்னார் வந்த உணவு ஒரு நாளுக்குக் கூடப் போதாது

## அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 25
''மன்னார் மாவட்டத்துக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் ஒரு நாளுக்குக்கூட போதுமானவை அல்ல.''

மன்னார் அரச அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் இதனைத் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட நிலமை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டத்தில் மக்கள் குறைவாகவே உள்ளனர்- பெரும்பாலானவர்கள் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். மன்னாரில் உணவுப் பிரச்சினை இருந்து வருகிறது. உணவின்றி மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

மன்னாரில் அரச செயலகங்கள், வங்கிகள் எவையும் இயங்கவில்லை. பணப் பிரச்சினையும் பெரும் பிரச்சினையாக உள்ளது. தண்ணீர் பிரச்சினையும் பெரும் சிக்கலாக உள்ளது.

இப்படி அவர் கூறினார். [இ-3]

## ஓமந்தை வைத்தியசாலை

யாழ்ப்பாணம், ஆக. 25
ஓமந்தை வைத்தியசாலை தொடர்ந்து மூடப்பட்டுள்ளது.

அந்த வைத்தியசாலையில் மருந்துக்களஞ்சியம் உடைக்கப்பட்டு மருந்து வகைகளும் களவாடப்பட்டுள்ளன.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி, வைத்திய அதிகாரிகள் ஆகியோர் புளியங்குளம் வைத்திய சாலையில் கடமை புரிகின்றனர். [இ-3]

# உளவாளிகளின் தகவல்கள் இனி கவனமாக மதிப்பீடாம்

## ரஞ்சன் சொல்கிறார் இப்படி

கொழும்பு, ஆக. 25
வடக்கில் விமானத் தாக்குதல்களில் பொது மக்கள் உயிரிழப்பதைக் குறைக்குமுகமாக, உளவாளிகள் தரும் செய்திகளைக் கவனமாக மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் கடந்த புதன் கிழமை பேசுகையில் அமைச்சர் இந்த உறுதிமொழியை அளித்தார் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ - எ)

# முகமாலையில் புதிய சந்தை

பச்சிலைப்பள்ளி, ஆக. 25
முகமாலை சிற்றூரவையினர் முகமாலை அன்னை வேளாங்கன்னி தேவாலயத்துக்கு அருகில் சந்தை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

முகமாலை, இந்திராபுரம், வேம்போடுகேணி, இத்தாவில் பகுதியைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனவு செய்யவும் அகதிகள் பொருள்களை கொள்வனவு செய்வதற்கும் வசதி ஏற்பட்டுள்ளது. (இ-117)

# பாடசாலைகள் தோறும் உப-உணவு உற்பத்தி

யாழ்ப்பாணம், ஆக. 25
யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களை உப உணவுப் பொருள் உற்பத்தியில் ஈடுபடுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வித்திணைக்களத்தில் கல்வி அதிகாரிகள், அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி 15 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் எனப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒன்றரைப் பரப்பு நிலம் ஒதுக்கப்பட்டு முதலில் பரீட்சார்த்தமாகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படும்.

பின்னர் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இதற்கான நிலங்களைத் தெரிவு செய்வதற்கும் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் விரைவில் கொத்தணி அதிபர்கள் கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருக்கிறது. (இ-5-3)

# ஊழியர் வரவு குறைவால் ஆகஸ்ட் சம்பளம் தாமதம்

யாழ்ப்பாணம், ஆக. 25
ஆசிரியர்களுக்கும், கல்வி அலுவலக ஊழியர்களுக்கும் ஆகஸ்ட் மாதச் சம்பளம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ஆனால் போதிய ஊழியர்கள் கல்வி அலுவலகத்துக்கு வேலைக்குச் சமூகமளிக்காததால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதச் சம்பளம் வழங்குவதற்கான கட்டுநிதி திருகோணமலை மாகாண கல்வி அமைச்சிடம் இருந்து வங்கிக்கு அனுப்பப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## பாலர் பாடசாலை

சாவகச்சேரி, ஆக. 25
வீரவேங்கை கண்ணனின் [illegible] பாலர் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. (இ-3)

# பஸ் - ரயில் கட்டணங்கள் ஞாயிறு முதல் உயர்வு

கொழும்பு, ஆக. 25
பஸ் ரயில் கட்டணங்கள் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை முதல் அதிகரிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

1.00 ரூபா 1 ரூா 50 சதமாகவும் 1 ரூபா 50 சதம் 2 00 ரூபாவாகவும் 2.00 ரூபா 3.00 ரூபாவாகவும் 2 ரூபா 25 சதம் 3 ரூபா 50 சதமாகவும் 2 ரூபா 50 சதம் 4.00 ரூபாவாகவும் 2 ரூபா 75 சதம் 4 ரூபா 50 சதமாகவும் பஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் பல பகுதிகளில்

# வியாழன் இரவு ஹெலி தாக்குதல்

## இருவர் பலி; பலர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 25
வியாழன் இரவு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஹெலிக்கொப்டர் தாக்குதல்களில் இருவர் மரணம் அடைந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

ஊர்காவற்றுறை, சரவணை, வேலணை, மானிப்பாய், உடுவில், ஆனைக்கோட்டை பொம்மைவெளி உட்பட பல இடங்களில் ஹெலியில் இருந்து, தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன சில இடங்களில்கிரனேட்டும் வீசப்பட்டது.

இத்தாக்குதல்களில் ஊர்காவற்றுறையிலேயே இருவர் உயிரிழந்தனர்.

வ. நாகமுத்து (வயது 65) நா. கிருபாமூர்த்தி(வயது 40) ஆகியோரே உயிர் இழந்தவர்கள் ஆவர்.

பொம்மை வெளியில் மட்டும் நால்வர் காயம் அடைந்து மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். எம். தமீம் (வயது 37) எஸ். எச். உஸ்மால்(வயது42) எஸ். ஏ. யூ. ஜமாலியா (வயது 13) எஸ். ஏ. யூ. ஜயூரியா (வயது 10) ஆகியோரே காயம் அடைந்த முஸ்லிம்கள்.

மற்றும் வட பிராந்திய போக்குவரத்துச்சபை காரை நகர் சாலையின் முன்னாள் முகாமையாளர் க. தியாகராசா, ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தைச்சேர்ந்த நா. கனகம்மா (வயது 60) மு. நிர்மலராசா (வயது 16) சரவணையைச் சேர்ந்த நா. லோகேஸ்வரி (வயது 57) வேலணையைச் சேர்ந்த தா. அரியபுத்திரன்(வயது35) ஆகியோரும் காயம் அடைந்துள்ளனர். (இ - 113)

## பட்டிக்குடியிருப்பில் மோதல்; ராணுவம் பின்வாங்கியது

யாழ்ப்பாணம், ஆக. 25
மட்டக்களப்பில் பட்டிக்குடியிருப்புப் பகுதியில் நேற்று முகாமை விட்டு வெளியேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

தாக்குதலை எதிர் நோக்க முடியாது இராணுவத்தினர் பின்வாங்கினர். அப்போது அப்பகுதியில் 3 வீடுகளை இராணுவத்தினர் எரித்து விட்டுச் சென்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-5]

## பொம்மர் குண்டு வீச்சில் குப்பிளானில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 25
குப்பிளான் பகுதியில் நேற்று முன்தினம் (வியாழன்) பொம்மர் குண்டு வீச்சில் ஒருவர் உயிரிழந்தார். வீடு ஒன்று முற்றாகச் சேதமுற்றது.

வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் குப்பிளான் குரும்பசிட்டி வீதியிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் கோபி என அழைக்கப்படும் குமார் என்ற இளைஞரே கொல்லப்பட்டார். இவர் ஓர் அனாதை எனத் தெரிவிக்கப்பட்டது.

### மாங்குளம்...,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர் என்று இராணுவ அதிகாரிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதேவேளை பரந்தன், ஆனையிறவு இராணுவ முகாம்கள் மீதான தாக்குதல்களையும் புலிகள் தீவிரப்படுத்தி இருப்பதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-எ)

### ஊரடங்கு

சென்னை, ஆக: 25
யாழ்ப்பாண மாவட்டத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளதாக ''தூரதர்ஷன்'' நேற்றிரவு செய்தி வெளியிட்டது.

எனினும் இலங்கை அரசின் வெகுஜன தொடர்பு சாதனங்கள் எதுவும் இதுகுறித்து எதுவித தகவலும் வெளியிடவில்லை. (ஒ-3)

# மக்கள் பெரும் எண்ணிக்கையில் இரவோடிரவாக இடம்பெயர்வு

## மண்டைதீவு வெறிச்சோடியது

யாழ்ப்பாணம், ஆக. 25
ஊர்காவற்றுறை பட்டினப் பகுதியில் தரை இறங்கி நிலை கொண்டிருந்த இராணுவம் கடற்கரை வீதி வழியாகமுன்னேற மேற்கொண்ட முயற்சியை அடுத்து ஆயிரக் கணக்கான மக்கள் அப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

மண்டைதீவு மக்களில் பெரும்பாலானோர்இரவோடிரவாக மண்கும்பான் வந்து அராலித்துறையை அடைந்து அங்கிருந்து படகுகளில் யாழ். நகரப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். மண்டைதீவு பகுதி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

மற்றும் சரவணை, தம்பாட்டி, கரம்பொன், புளியங்கூடல் பகுதிகளைச் சேர்ந்த பலர் வெளியேறி சருவில், வேலணை பகுதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அதே சமயம் கடந்த புதன் கிழமை இடம் பெற்ற பொம்மர், ஹெலி தாக்குதல்கள் காரணமாக காரை நகரில் உள்ள ஆலடி, கருங்காலி, வியாவில் பகுதிகளில் இருந்து பலர் வெளியேறி உள்ளனர்; மூளாய், சுழிபுரம் பகுதிகளிலும் மானிப்பாய், ஆனைக் கோட்டைபகுதிகளிலும்அவர்கள்தங்கி உள்ளனர். (இ-113)

## யாழ்ப்பாணத்துக்கு வந்த 3 கப்பல்கள் திருமலையில்

திருகோணமலை, ஆக. 25
யாழ்ப்பாணம் நோக்கி உணவுப் பொருள்களைக் கொண்டு சென்ற மூன்று கப்பல்கள் இப்போது திருகோணமலையில் தரித்துநிற்கின்றன.

யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றி வந்து, இறக்க முடியாத நிலையில் திரும்பிய கப்பலும் அவற்றில் ஒன்றாகும்.

அதே வேளை — யாழ்ப்பாணத்துக்கு மா எடுத்துச் செல்வதற்காகக் கொழும்பில் இருந்து வந்த கப்பலும், மற்றுமொரு உணவுக் கப்பலும் திருமலையில் நிற்கின்றன. (இ-3)

### நள்ளிரவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சப்பட்டது.

மண்கும்பான், மண்டைதீவுப் பகுதிகளில் தரித்து நிற்கும் கடற்படைக் கப்பல்களில் இருந்து இந்த ஷெல் குண்டுகள் ஏவிவிடப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஷெல் தாக்குதல்களை அடுத்து மேற்படி பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் நள்ளிரவு வேளையில் அப்பகுதிகளில் இருந்து கூட்டம் கூட்டமாக வெளியேறியதையும் காணமுடிந்தது. [உ]

### மானிப்பாய் ஆஸ்பத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சேதமுற்றது. சுற்றாடல் பகுதியில் கலிபர் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்களைக் காணக்கூடியதாகவிருந்தது.

மானிப்பாயில் உள்ள போதனா ஆஸ்பத்திரிக் கட்டடத்தின் மீது ஏற்கனவே இரு தடவைகள் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றன என்பதும்—

இது பற்றி அரச உயர் மட்டத்துக்கு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு எடுத்துக் கூறியதை அடுத்து இனிமேல் இத்தகைய தாக்குதல் நடத்தப்படமாட்டது என அப்போது அரச தரப்பினரால் உறுதி வழங்கப்பட்டது என்பதும் தெரிந்தவையே.

வியாழன் நள்ளிரவு தாக்குதல் நடத்தப்பட்டவுடன் அதுபற்றி உடனடியாக யாழ்ப்பாணம் கோவில் வீதியில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

கொழும்பில் அரச உயர் அதிகாரிகளுடன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச அதிகாரிகள் விரைந்து தொடர்பு கொண்டதாகவும்—

ஆனால் அப்படியான தாக்குதல் சம்பவம் ஏதும் இடம் பெறவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்ததாகப் பதிலளிக்கப் பட்டதாதவும் அறியவந்தது

#### நேரில் சென்று பார்த்தனர்

இதன் பின்னர் நேற்றுக் காலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் வானத் தாக்குதலினால் சேதமுற்ற இடங்களைப் பார்வையிட்ட பின்பு தாக்குதல் சம்பவம் உண்மை என்று கொழும்பு அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினர் என்றும் அறிய வந்தது.

அதனை அடுத்து இனிமேல் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெற மாட்டாது என மீண்டும் உறுதி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது .(உ-3-113)

### வேலணையில்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
நிலை என்ன என்பது குறித்து எதனையும் அறிய முடியாத விதத்தில் வேலணைக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாக வேலணையில் இருந்து வந்த ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இராணுவத்தினர் புதன் கிழமை அதிகாலை நடத்திய வானத் தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் காயமுற்றனர் என்றும், சிலர் உயிரிழந்திருக்கலாம் என்றும் அவர் மேலும் கூறினார்.

காயமடைந்தவர்களுக்கு வேண்டிய வைத்திய வசதியளிக்க வேலணை வைத்திய சாலையில் போதிய வசதிகள் இல்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

காயமடைந்தவர்களை கூட்டிவந்து மானிப்பாயில் சிகிச்சையளிக்க ஏற்பாடுகள் செய்யுமாறு செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ-3-5)

### ஊர்காவற்றுறை,..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பாலாவோடைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் காரைநகரின் ஏனைய பகுதிகளுக்கும் முன்னேற முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

பொதுமக்கள் கொல்லப்படுவது சாதாரணம்

## ஹிட்லரை உதாரணம் காட்டும் மந்திரி ரஞ்சன்

கொழும்பு, ஆக. 25
யுத்தம் ஒன்றில் பொதுமக்கள் (சிவிலியன்கள்) கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது.

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா குறிப்பிட்டார்.

செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

ஹிட்லர் நடத்திய யுத்தத்தில் 5 கோடிப்பேர் உயிரிழந்தனர். அவர்களில் 80 சதவிகிதத்தினர் பொதுமக்கள் என்றும் அவர் உதாரணம் காட்டினார். (அ-எ)

# மண்டைதீவுக்கு பாலம் போட இராணுவம் முயற்சியாம்

கொழும்பு, ஆக. 25
மண்டைதீவுக்குப் பாலம் ஒன்றை அமைத்து ஊர்காவற்றுறையுடன் போக்குவரத்து தொடர்பை ஏற்படுத்தும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டிருக்கின்றனர்.

இத்தகவலை கொழும்பில் இராணுவ அதிகாரிகள் வெளியிட்டதாக பி. பி. சியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொரிஸ் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

யாழ். குடா மீதான தாக்குதல்கள் குறித்து இராணுவத் தரப்பினர் விவரமான தகவல்களை வெளியிடத் தயக்கம் காட்டுகின்றனர்.

போராளிகள் ஏராளமான கண்ணிவெடிகளை விதைத்து வைத்திருப்பது தங்களுடைய நடவடிக்கையைத் தாமதப் படுத்துவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

இதுவரை நடந்த சண்டையில் விடுதலைப் புலிகள் போராளிகள் 30 பேரும் — மூன்று படையினரும் உயிரிழந்தனர் என்றும் இராணுவத் தரப்பினர் கூறுகின்றனர்.

## மறுப்பு

கொழும்பு, ஆக. 25
தமது இயக்கத்தைச் சேர்ந்த எவரையும் ஸ்ரீலங்கா அரச படைகள் ஹெலியால் சுட்டுக் கொல்லவில்லை என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் மறுத்ததாக ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

படைகள் நடத்தும் வானத் தாக்குதலினால் பொதுமக்களே பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டனர் என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார். [அ]

இதேவேளை— கடந்த புதன்கிழமை இரவு மோட்டார் சைக்கிள்களிலும், சைக்கிள்களிலும் சென்ற போராளிகள் மீது அரசுப் படைகள் ஹெலிக்கொப்டர்மூலம் நடத்திய தாக்குதலில் குறைந்தது 100 போராளிகள் இறந்தனர் என்று இராணுவம் கூறுகிறது.

வடபகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது என்று இராணுவத் தரப்பினர் கூறினாலும் இடம் எங்கு என்பதைத் தெரிவிக்கவில்லை. இச்சம்பவத்தை சுயேச்சை வட்டாரங்கள் எதுவும் ஊர்ஜிதம் செய்யவில்லை.

விடுதலைப் புலிகள் போராளிகள் ஒரே நேரத்தில் இப்படிப் பெரும் எண்ணிக்கையில் செல்வது வழக்கமில்லை ஆயினும், அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் அவர்களைக் கொல்லக்கூடிய அளவு ஹெலிக்கொப்டர் தாழப் பறந்து சென்று இருக்கும் என்பது கேள்விக்குரியதாகும் — இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார். (அ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org